INSTITUTE FOR HEALTH POLICY

72, Park Street, Colombo 2, Sri Lanka
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

**PRESS RELEASE**

**திகதி வரை தடையாணை**

திகதி: 17 March 2023
நேரம்: 12:01 AM Sri Lanka Time

**மேலும் தகவல்களுக்கு அணுகவும்**

டல்ரீன் பாத்லாட்
மின்னஞ்சல்: dalreen `at' ihp.lk

**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi `at' ihp.lk Twitter: @ravirannaneliya

# என்.பி.பி./ஜே.வி.பி., எஸ்.ஜே.பி., மற்றும் ஐ.டி.எ.கே. யின் கீழ் வாக்காளர்கள் ஒன்றுதிரள்கிறார்கள். என்.பி.பி./ஜே.வி.பி. தெளிவாக முன்னணியில் உள்ளது

## *IHP MRP வாக்களிப்பு தீர்மானம் பிப்ரவரி 2023 மதிப்பீடு.*

பிப்ரவரி 2023 இல் நடந்த இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வின் (SLOTS) அன்மித்த கருத்துக்கணிப்பு தேசிய அளவில் வாக்காளர்கள் என்.பி.பி./ஜே.வி.பி. மற்றும் எஸ்.ஜே.பி. யின் கீழும், வடக்கு மாகாணத்தில் ஐ.டி.எ.கே மற்றும் எஸ்.ஜே.பி. யின் கீழும் ஒன்றுதிரள்கிறார்கள் என்பதையும், எஸ்.எல்.பி.பி, எஸ்.எல்.எப்.பி மற்றும் யூ.என்.பி. க்கான ஆதரவு சரிவதையும் காட்டுகின்றது.

பிப்ரவரியில் என்.பி.பி./ஜே.வி.பி.க்கான ஒட்டுமொத்த ஆதரவு எஸ்.ஜே.பி. யின் 36% விதத்துடன் ஒப்பிடும்போது 43% சதவிதமாக தெளிவான முன்னணியுடன் எழுச்சி பெற்றது. எஸ்.எல்.பி.பி, யூ.என்.பி. மற்றும் ஐ.டி.எ.கே தலா வாக்களிக்கக்கூடியவர்களில் 4% விகிதத்தைப் பெற்று மிகவும் பின்தங்கியிருந்தனர், மேலும் எஸ்.எல்.எப்.பி. ஆதரவு 2% விதத்தில் தேங்கி இருந்தது.

பொது தேர்தல் பற்றிய வாக்களிப்பு தீர்மானம், பிப்ரவரி 2023 (அநேகமாக வாக்களிக்கக்கூடியவர்கள் %)

இன்று பொதுதேர்தல் நடந்தால், நீங்கள் எந்தக் கட்சிக்கு வாக்களிப்பீர்கள்?




**சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு MRP**


பிப். 2023 இல் நடத்தப்பட்ட 421 நேர்காணல்கள் மற்றும் ஆகஸ். 31 2021- மார். 12 2023 வரை நடத்தப்பட்ட 10,050 மொத்த நேர்காணல்களின் அடிப்படையில் மதிப்பீடுகள் கணக்கிடப்பட்டன. MRP மாதிரி கொண்டு மதிப்பீடுகள் கணிக்கப்பட்டன மேலும் மதிப்பீடுகளிற்கான பிழை விளிம்பு 2-5% என்று மதிப்பிடப்பட்டது.

IHP INSTITUTE FOR HEALTH POLICY

வாக்களிக்கும் வாய்ப்பு குறைவு என்று ஆதரவாளர்கள் கூறியதோடு வாக்களிப்பாளர் ஆர்வத்தில் ஒரு இடைவெளி இல்லாமல் இருந்திருந்தால், பிப்ரவரியில் என்.பி.பி./ஜே.வி.பி. வாக்குவித்தியாசத்தில் இன்னும் முன்னணியில் இருந்திருக்கும். இது எஸ்.ஜே.பி. யோடு இருந்த வாக்குவித்தியாசத்தை வயதுவந்தவர்களிடையே 15 புள்ளிகளிலிருந்து (44% எதிர் 29%) வாக்களிக்கக்கூடியவர்களிடையே 13% ற்கு குறைத்தது என்று IHP மதிப்பிடுகிறது.

என்.பி.பி./ஜே.வி.பி. க்கு சாதகமான இந்த எழுச்சி, அதற்கும் எஸ்.ஜே.பி. க்கும் இடையே மூன்று மாதங்களாக இருந்த நெருக்கமான போட்டியை தொடர்கிறது. இதற்கு நேர்மாறாக எஸ்.ஜே.பி.க்கான ஆதரவு பிப்ரவரியில் அதிகரிக்கவில்லை. MRP எனும் மாதிரி முறையை கொண்டு செய்யப்பட்ட IHPன் அன்மித்த பகுப்பாய்வு, எஸ்.எல்.பி.பி. ஆதரவு கடைசியாக உச்சமடைந்த பிப்ரவரி 2022ஐ பின் தொடர்ந்த 12 மாத காலத்தில் என்.பி.பி./ஜே.வி.பி. 30 புள்ளிகளையும் எஸ்.ஜே.பி. 11 புள்ளிகளையும் பெற்றதாக குறிக்கின்றது. இதற்கிடையில், எஸ்.எல்.பி.பி. மற்றும் எஸ்.எல்.எப்.பி முறையே 28 மற்றும் 15 புள்ளிகள் இழந்துள்ளன, மேலும் யூ.என்.பி.யினுடைய ஆதரவில் ஏற்றத்தாழ்வுகள் இருந்தாலும் அது இரண்டு புள்ளிகள் மட்டுமே அதிகரித்தது.

**IHP SLOTS** பொது தேர்தல் பற்றிய வாக்களிப்பு தீர்மானம், பிப்ரவரி 2023 (அநேகமாக வாக்களிக்கக்கூடியவர்கள் %)
இன்று பொதுதேர்தல் நடந்தால், நீங்கள் எந்தக் கட்சிக்கு வாக்களிப்பீர்கள்?




**சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு MRP**
ஆகஸ். 31 2021- மார். 12 2023 வரை நடத்தப்பட்ட 10,050 மொத்த நேர்காணல்களின் அடிப்படையில் மாதாந்திர மதிப்பீடுகள். MRP மாதிரி கொண்டு மதிபபீடுகள் கணிக்கப்பட்டன மேலும் மாதம் மற்றும் கட்சியைப் பொருத்து மதிப்பீடுகளின் பிழை விளிம்பு 1-6% என்று மதிப்பிடப்பட்டது.

IHP INSTITUTE FOR HEALTH POLICY

மாகாண அளவில் என்.பி.பி./ஜே.வி.பி. மற்றும் எஸ்.ஜே.பி. முன்னணி வகிப்பதை தம்மிடையே பகிர்ந்துகொண்டதுடன் ஐ.டி.எ.கே. தென் மாகாணத்தில் முன்னணியில் இருந்தது. கடந்த நான்கு மாதங்களில், மேல், தென், வட மத்திய மற்றும் வட மேற்கு மாகாணங்களில் என்.பி.பி./ஜே.வி.பி. யும், அதே சமயம் மத்திய, கிழக்கு, ஊவா மற்றும் சபரகமுவ  மாகாணங்களில் எஸ்.ஜே.பி. யும் முன்னணியில் இருந்தன.

இன்று பொது தேர்தல் நடத்தப்பட்டால், இந்த போக்கின் அடிப்படையில், எஸ்.எல்.பி.பி, எஸ்.எல். எப்.பி மற்றும் யூ.என்.பி. , பல மாவட்டங்களில் ஆசனங்களை ஜெயிக்க தவறி விடுவார்கள் என்று SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளரும் IHPஇன் நிர்வாகப் பணிப்பாளருமான வைத்தியர் ரன்னன்-எலிய சுட்டிக்காட்டினார். ஏனெனில் வெட்டுப்புள்ளி அடைவதற்கு கூட அவர்கள் பெறும் வாக்குகள் போதாமையாக இருக்கும்.

ஜனாதிபதி கோடாபய ராஜபக்ஷெவின் நிர்வாகம் உடைந்ததைத் தொடர்ந்து, வாக்காளர்கள் தொடர்ந்து கட்சி விட்டு கட்சி மாறியபோது எந்த கட்சிகளும் ஆதிக்கம் செலுத்தாமல் இருந்த குழப்பதிலிருந்து வாக்காளர்கள் கடந்து சென்றிருப்பதை அன்மித்தக் கருத்துக்கணிப்பு சுட்டிக்காட்டுவதாக மேலும் கூறினார்.

முழு அறிக்கை ihp.lk இலிருந்து கிடைக்கும்

Institute for Health Policy, February 2023, “IHP MRP Voting Intentions Update February 2023: Voters consolidate around the NPP/JVP, SJB and ITAK, with NPP/JVP taking a clear lead”, SLOTS Report #2023-06. Available at [http://ihp.lk/publications/docs/SLOTSReport202306.pdf](http://ihp.lk/publications/docs/SLOTSReport202306.pdf).

**IHP பற்றி**

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

**முறை**

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின்(18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்கானல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. வாக்களிப்பு தீர்மானத்தை Multilevel Regression and Post-Stratification (MRP) தழுவிய முறை கொண்டு IHP மதிப்பீடு செய்தது. இந்த உடன் தொடர்பு முறை குறிப்பிட்ட மாதத்தில் வாக்களிப்பதை மதிப்பீடு செய்ய அனைத்து SLOTS நேர்காணல்களின் தரவினையும் முழுமையாக பயன்படுத்துகிறது.

பிப்ரவரி 2023க்கான MRP மதிப்பீடுகள் பிப்ரவரி 2023 ல் நடத்தப்பட்ட 421 நேர்காணல்கள் மற்றும் ஆகஸ்ட் 31 2021-மார்ச் 12 2023 வரை நடத்தப்ட்ட 10,050 நேர்காணல்களின் மொத்தத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. மேலும் முன்னணி கட்சிகளிற்கான மதிப்பீடுகளின் பிழை விளிம்பு 2-5% என்று மதிப்பிடப்பட்டது.

MRP என்பது மற்ற நாடுகளில் உள்ள வாக்கெடுப்பு நிறுவனங்களால் சிறிய கூறுகளை முழுமையாக பயன்படுத்துவதற்கு அதிகமாக உபயோகப்படுத்தப்படும் ஒரு முறையாகும். குறிப்பாக YouGov, UK Brexit வாக்கெடுப்பு மற்றும் சமீபத்திய UK பொதுத் தேர்தல்களின் முடிவுகளை முன்னறிவிக்கப் பயன்படுத்தியது. தேசிய சனத்தொகையின் வயது, பாலினம், இனக்குழு, பொருளாதார நிலை, கல்வி, இடம், மற்றும் 2019 ஜனாதிபதி மற்றும் 2020 பொது தேர்தல் வாக்களிப்போடு மாதிரி பொருந்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் சரிசெய்யப்பட்டன.

நிதியுதவி

இலங்கையில் நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் மற்றும் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR) ஆசியா மன்றம்(The Asia Foundation) மற்றும் ஏனையோர் SLOTS ஆய்விற்கு நிதியுதவி அளித்துள்ளனர். ஆனால் ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.